**<u>STARTING TIME 10.50 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 172/2019</u>**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 24.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **வாணி** Husband's Name :

Address :

Calling : Age :

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1. அசல் வழக்கு எண் 171/2019—ன் 1—ம் வாதி பரசுராமன் எனது கணவரின் மூத்த சகோதரர் என்றால், சரிதான். 2—ம் வாதி எனது கணவர் என்றால், சரிதான். 1, 2 வாதிகள் கோவிந்தராஜ் என்பவரின் வாரிசுகள் என்றால், சரிதான். 1, 2 வாதிகள் மட்டும் தான் முதலில் இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால், சரிதான். 1—ம் வாதி ஊரில் உள்ளார் என்றால், உள்ளார். 3—ம் வாதி எனது மாமியார் என்றால், சரிதான். நானும், 5—ம் வாதியும் 2—ம் வாதியின் வாரிசுகள் என்றால், சரிதான்.

2. நான் இவ்வழக்கில் எனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கின்றேனா என்றால், ஆமாம். இவ்வழக்கின் 1—ம் வாதியை சாட்சியாக

விசாரிப்பேனா என்றால், இல்லை. அசல் வழக்கு எண் 172/2019–ஐ என்னென்ன சொத்துக்காக வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஒரு அயிட்டத்தில் 50 செண்ட் சொத்துக்காகவும், மற்றொரு அயிட்டத்தில் 12–1–2 செண்ட் நிலம் மற்றும் அதில் கட்டியுள்ள வீட்டிற்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண் என்னவென்றால் எ–அட்டவணையின் சர்வே எண் 245/1 எ, பி–அட்டவணையின் சர்வே எண் 170/3 ஆகும்.

3. என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், தாவா சொத்துக்கள் எங்களுக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்யக் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

4. இவ்வழக்கின் பிரதிவாதிகள், இவ்வழக்கின் பி–அட்டவணை சொத்தினை குறித்து என் மீதும், என் கணவர் மீதும் அசல் வழக்கு எண் 161/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான். அந்த வழக்கும் இவ்வழக்குடன் கூட்டாக விசாரிக்க உள்ளது என்றால், சரிதான். அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டகப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், தெரியும்.

5. இவ்வழக்கின் பிரதிவாதிகள், இவ்வழக்கின் எ–அட்டவணை சொத்தினை குறித்து இவ்வழக்கின் 1–ம் வாதியின் மீது அசல் வழக்கு எண் 170/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான். அந்த வழக்கும் இவ்வழக்குடன் கூட்டாக விசாரிக்க உள்ளது என்றால், சரிதான். அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டகப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், தெரியும். அசல் வழக்கு எண் 170/2019 என்ற வழக்கை முதலில் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

6. போடி நாயுடு என்பவர் யார் என்றால், எனது மாமனாரின் அப்பா ஆவார். போடி நாயுடுவிற்கு மொத்தம் எத்தனை மகன்கள் என்றால், 4 மகன்கள் ஆகும்.

அவர்கள் பெயர் என்னவென்றால், எனது மாமனார் கோவிந்தராஜுலு நாயுடு, சீனிவாச நாயுடு, பக்தவச்சல நாயுடு, மணி நாயுடு ஆகும். போடி நாயுடுவிற்கு எத்தனை மகள்கள் என்றால், இரண்டு மகள்கள், அவர்கள் பெயர் தெரியவில்லை. போடி நாயுடுவின் மனைவி பெயர் சுப்பம்மாள் ஆகும்.

7. போடி நாயுடு 17.12.1988 அன்று காலமானார் என்றால், சரிதான். அவரது இறப்பு சான்றிதழியை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. போடி நாயுடுவின் மனைவி சுப்பம்மாள் எப்போது காலமானார் என்றால், தேதி தெரியவில்லை. போடி நாயுடு காலமான பின்பு தான் அவரது மனைவி காலமானார் என்றால், சரிதான். போடி நாயுடுவும் அவரது மகன்கள் மற்றும் மகள்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்ததாக சொல்கிறேனா என்றால், ஆமாம்.

8. போடி நாயுடு உயிருடன் இருந்த போதே அவரது மகள்களுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார் என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. போடி நாயுடுவிற்கு சொந்தமான சொத்துக்கள் இருக்கிறதா என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. போடி நாயுடு உயிருடன் இருந்த காலம் வரை கூட்டுக்குடும்ப சொத்துக்களை அவர் தான் நிர்வாகம் செய்து வந்தார் என்றால், சரிதான்.

9. போடி நாயுடுவிற்கு சொந்தமாக எவ்வளவு சொத்துக்கள் இருந்தது, எவ்வளவு சொத்துக்களை அவர் விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்று தாவாவில் எதுவும் சொல்லவில்லை என்றால், சரிதான். போடி நாயுடு காலமான பிறகு அவருக்கு சொந்தமான சொத்துக்களை அவரது வாரிசுகள் பாகம் பிரித்துக் கொண்டார்களா, இல்லையா என்று தாவாவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. எனக்கும், 2—ம் வாதிக்கும் எப்போது திருமணமானது என்றால், 1999—ம் ஆண்டு திருமணமானது.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ENDING TIME: 11.16. A.M.**

YUVARAJ Digitally signed by YUVARAJ Date: 2025.07.24 14:25:19 +0530